புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol: 08, Issue : Special
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
SACRED HEART RESEARCH PUBLICATIONS
March 2025
ISSN: 2456-821X

# 51. TML1190 - நாட்டார் மரபில் பெண் தெய்வ வழிபாடு

து.சுமதி,
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை,
தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி),
திருப்பத்தூர் – 635601.
திருவள்ளுவர் பல்கலைக்கழகம், சேர்காடு.

முனைவர் கி.பார்த்திபராஜா
தமிழ்த்துறைத் தலைவர் (சுழற்சி – 1)
தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை
தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி)
திருப்பத்தூர் – 635 601.

**ஆய்வுச் சுருக்கம்**

*பண்டைய உலகம் தெய்வ நம்பிக்கையின் அடிப்படையில் இயங்கியது அக்காலம் என்றும் சங்க காலம் முதல் இன்றைய காலம் வரை குறிப்பாக நடுகல் வழிபாடு. எனவே அன்று முதல் இன்றளவும் மக்கள் கடவுளை வழிபாடு செய்கின்றன. நாட்டுப்புறத் தெய்வங்கள் சில தெய்வங்கள் பற்றியும் சிறு தெய்வங்கள் பற்றியும் பிறப்பு, இறப்பு பற்றியும் தெய்வமான கதை பற்றியும் இக்கட்டுரை மூலம் எடுத்துரைப்பதே இந்த ஆய்வின் நோக்கம் ஆகும்.*

**முன்னுரை**

*மிகப் பழங்காலத்தில் அச்சத்தின் காரணமாகவும், பாதுகாப்பு காரணமாகவும், தேவைகள் காரணமாகவும் , கடவுள் வழிபாடு தோன்றியது . அதனால் தான் பின்னாளில் தோன்றிய எல்லாச் சமயங்களும் கடவுளர் திருமேனிகளும் கடவுள் தன்மை பெற்ற மனிதர்களும் அஞ்சாதீர்கள் பாரத்தை என்னிடம் சுமக்கவிடுங்கள் நான் உங்களுக்கு அடைக்கலம் தருவேன். தெய்வத்தின் திருஉருவங்களும் அஞ்சாதே என்னிடம் ஆயுதங்கள் இருக்கின்றன." என்னிடம் அடைக்கலம் புகுந்தால் உன்னை காப்பாற்றுகிறேன் என்றும் உனக்குத் தேவையானதை அளிக்கிறேன் என்று கரங்களில் ஆயுதங்களை ஏந்தி அபயஹஸ்தத்தை காட்டி அருள் செய்கின்றன".–1*

**நாட்டார் பெண் தெய்வங்கள்**

*கிராமபுங்கள் தோறும் பெண்களை தெய்வங்களாக இன்றைய காலத்தில் வணங்குகின்றன. திரௌபதி அம்மன்,மாரியம்மன்,பாட்டைசாரதியம்மன்,மாரியம்மன்,சாமுண்டீஸ்வரி காளியம்மன், சாமுண்டீஸ்வரி, கெங்கையம்மன், நாக தேவதை. என்ற பல தெய்வங்கள் பல பெயர்களால் வணங்கப்படுகின்றதன.. ஒரு சில இடங்களில் மரங்களும், புதர்களும் தெய்வமாகக் கருதி வழிபடப் பெறும் மரங்கள் பெரும்பால மக்கள் இன்றும் குலதெய்வ வழிபாடு மரத்தடியில் வழிபாடு செய்கிறார்கள் இதை கிராமப்புறங்களில் நாம் அதிகமாக காணலாம். பனை,வேம்பு,புவரசு ஆகிய மரங்களை கடவுளாக வழிபாடு செய்கிறார்கள்.*

**பெண் தெய்வங்கள் தோன்றிய வரலாறு**

*பாலூர் திரௌபதி அம்மன் கோயில்*

**தர்மகர்த்தா**

*கொத்தூர் கிராமத்தை சேர்ந்தவர் சென்னைய நாயுடு ( லேட் ) , வீராசாமி நாயுடு ( லேட் ) இவர்களின் மகன் திரு . கோவிந்தன் நாயுடு இவரின் மகன் திரு . செந்தில் நாயுடு தற்போது திரௌபதி அம்மன் கோயிலின் தர்மகர்த்தாவாகவும் , நிர்வாகியகவும் பாலூர் திரௌபதி அம்மன் கோயிலை இன்று வரை அனைத்து பொறுப்புகளையும் வீராசாமிநாயுடு இவர் வம்ச வழியாக இவர்களின் பேரனும் திரு .மோகன் நாயுடு (அட்வகேட்) இவர்கள் இருவரும் தற்போது இக்கோயிலின் நிர்வாகிகள் ஆவார்கள்.*

**திரௌபதி அம்மன் கோயில் அமைப்பு**

*திரௌபதி அம்மன் கோயில் வேலூர் மாவட்டம் பேர்ணம்பட்டு தாலுக்கா பாலூர் திரௌபதி அம்மன் கோயில் தேசிய நெடுஞ்சாலையில் ( ஆம்பூர் to பேர்ணம்பட்டு செல்லும் வழியில் ) கிழக்கு திசை*

*நோக்கி அமைந்துள்ளது. கோயிலின் நுழைவாயிலின் இருப் பக்கங்களிலும் காவல் தெய்வங்கள் போர்த்து ராஜா சுதை உருவங்களாக காட்சியளிக்கிறார். கோயிலின் சுற்றுப்புறச் சுவர்கள் மீது பாண்டவர்கள் சிலை வைக்கப்பட்டுள்ளது . திரௌபதி அம்மன் கோயிலுக்கு அருகில் தேசிய நெடுஞ்சாலைக்கு பக்கத்தில் வலது புறத்தில் சிறுதெய்வங்களான பாட்டை சாரதியம்மன் கோயிலும் , நேராக நாகதேகதை கோயிலும் அமைந்துள்ளது.*

**பாலூர் திரௌபதி அம்மன கோயில் தோன்றிய வரலாறு**

*பாலூர் பக்கத்தில் உள்ளது கொத்தூர். இந்த ஊரை சேர்ந்தவர் திரு . வீராசாமி நாயுடு,,இவரின் மகன் திரு . சென்னைய நாயுடு பாலூர் பகுதியை சேர்ந்தவர் திரு .மட்டிபார் கவுண்டர் இருவரும் நண்பகள் திரு . சென்னைய நாயுடு திருமணமாகி வெகுநாட்களாக குழந்தை பேறு இல்லாதால் தன் சொத்துக்கள் நிலம் அனைத்தையும் திரௌபதி அம்மன் கோயிலுக்கு தன் நண்பர் மூலம் தானமாக ஒப்படைத்தார் என்பது செவிவழி செய்தி ஆகும் .*

**சடங்கு முறைகள்**

*சித்திரை முதல் நாள் அன்று கொடியேற்றி தொடங்கி நாளிலிருந்து 15 நாட்கள்அனைத்து பக்தர்களும் காப்புகட்டுதல் , புலால் உண்ணாது இருத்தல் , காலணி அணியாமல் இருத்தல், தெருக்கூத்து, மகாபாரத சொற்பொழிவு , தீமிதித்தல், அம்மனுக்கு , பூஜை தினந்தோறும் செய்தல் ,போன்ற சடங்கு முறைகள் பின்பற்றப்படுகின்றன்*

**நம்பிக்கை**

*திருமணம் ஆகாத கன்னி பெண்களுக்கு விரைவில் திருமணம் நடைபெறவும், குழந்தை வரம், தீராத நோய்கள் குணமாதல் ,எடைபோடுதல்,நடைபெறாத செயல்களை நடந்து முடிதல்,உடல் நலம் இந்த அனைத்தும் நடப்பதாக மக்களின் நம்பிக்கை ஆகும்.*

**வழிபாடு**

*"பாரதம் என்பது கெவ்விலக்கியக் கதை நாட்டார் வழக்காற்றுக் கூறுகளுடன் இணைந்து தீமிதி வா என்ற பெயரில் திரௌபதியை மையத் தெய்வமாக் கொண்ட வழிபாடாக உருவாகியுள்ளது"–2. பூஜை நடைபெறும் நாட்கள் வெள்ளி, செவ்வாய் ஆகிய இரு நாட்கள் பூஜை நடைபெறுகிறது.இதில்பூ,பழம், தேங்காய்,வெற்றிலை பாக்கு,நெய், பால், பன்னீர் ,அபிஷேக பொடி ஆகியபொருட்கள் வைத்து பூஜை செய்யப்படுகிறது.பௌவுர்ணமி,அமாவாசை நாள் அன்று சிறப்பு பூஜை நடைபெறுகிறது.தமிழ் பண்பாட்டில் திரௌபதி அம்மன் வழிபாடு–1*

**மாரியம்மன், பாட்டை சாரதியம்மன் இரண்டு அம்மனுக்கும் ஒரே கோயில்**

*பாலூர் திரௌபதி அம்மன் கோயிலுக்கு அருகில் தேசிய நெடுஞ்சாலைக்கு பக்கத்தில் வலது புறத்தில் சிறுதெய்வங்களான மாரியம்மன் கோயில் உள்ளது. இங்கு இந்த கோயில் உருவான கதை பார்ப்போம் .இக்கோயில் 105 வருடம் பழமை வாய்ந்தது .முதலில் 3 கல் அதன் மேல் ஒரு கல் வைத்து வழிபாடு செய்தனர் திரு.மாசிலாமணி இவர் தம்பி முனிசாமி வெகு நாட்களாக குழந்தை பேறு இல்லை குழந்தை பிறந்தால் மாரிக்கு கோயில் கட்டுவதாகவும் பெண்ணாக பிறந்தால் மாரி என்றும் ஆணாக பிறந்தால் மாரியப்பன் என்று பெயர் சூட்டுவதாக வேண்டிய பிறகு அவ்வாறே குழந்தை பிறந்ததாம்.ஆணாக பிறந்ததால் மாரியப்பன் என்று பெயர் சூட்டினார் மாரியப்பன் கோயில் கட்டி முடித்தார் என்றும் அவர் வம்ச வழியாக இள்று வரைபூஜை நடைபெறுகிறது. "மாரிகளில் சிறப்பு வாய்ந்தவள் இருக்கன்குடி மாரியம்மன் ஆவாள்.".–3*

**சடங்கு**

*கூழ் ஊற்றுதல் ,ஆடு, கோழி போன்றவற்றை பலி கொடுத்தல் தினந்தோறும் பூஜை செய்தல்*

வேண்டுதல் இப்பவர் வாரத்திற்கு ஒரு நாள் பூஜை செய்கிறார்கள் கார்த்திகை ,தை மாதங்களில் சிறப்பு பூஜை நடைபெறுகிறது.

**நம்பிக்கை**

*குழந்தை வரம், தீராத நோய்கள் குணமாதல் ,எடைபோடுதல்,நடைபெறாத செயல்களை நடந்து முடிதல்,உடல் நலம் இந்த அனைத்தும் நடப்பதாக மக்கள் நம்பிக்கை ஆகும்.*

**வழிபாடு**

*செவ்வாய், வெள்ளி, கிழமைகளில் ஆகிய இரு நாட்களும் பூஜை நடைபெறுகிறன. பூ, பழம், தேங்காய், வெற்றிலை பாக்கு, நெய், பால், பன்னீர் ,அபிஷேக பொடி, குங்குமம், மஞ்சள் ஆகியயன படைக்கப்படும்*

*பொருட்கள் ஆகும்*

**சாமுண்டீஸ்வரி.**

*சாமுண்டீஸ்வரி அம்மன் கோயில் தோன்றிய வரலாறு*

*பாலூர் திரௌபதி அம்மன் கோயிலுக்கு அருகில் தேசிய நெடுஞ்சாலைக்கு கிழக்குபுறம் உள்ளே நோக்கி சென்றால் அருள்மிகு சாமுண்டீஸ்வரி அம்மன் கோயில் அமைந்துள்ளது. 150 வருடம் பழமை வாய்ந்தது. முதல் முதலாக இந்த கோயிலை உருவாக்கியவர் ஊர் நாட்டாமை திரு.சங்கரன் கவுண்டர் அவர்களின் தாத்தா முதல் முதலாக வேப்பமரத்தடியில் மூன்று கல் வைத்து வழிபாடு செய்துள்ளார். அவர் மறைவுக்கு பின் அவர் மகன் பராமரித்து வந்திருக்கிறார். தற்போது அவர் பேரன் ஊர் நாட்டாமை திரு.மகேஷ் அவர்கள் தலைமையில் கோயில் புதியதாக கட்டப்பட்டு புதிய சிலை வைத்து குடமுழக்கு நடைபெற்றது. பாலூர் கிராம தேவதையாக சாமுண்டீஸ்வரி அம்மன் காப்பதாக பாலூர் மக்கள் நம்பிக்கை ஆகும்.*

**நம்பிக்கை**

*ஊர் காக்கும் கிராம தேவதை என்று மக்கள் நம்பிக்கை பூஜை செய்தல் ,கோயிலுக்கு வரும்பக்தர்களுக்கு அருள்வாக்கு சொல்லுதல், பில்லி, சூன்யம், ஏவல், பேய்ஓட்டுதல், நோய்களைகுணமாக்குதல், குழந்தை யின்மை . எடைபோடுதல் போன்றவைகள் சாமுண்டீஸ்வரி அம்மன்நிறை வேறுவதாக மக்கள் நம்பிக்கை ஆகும்.*

**சடங்கு**

*தை மாதம் திருவிழா நடைபெறுகிறது. திருவிழாவின் போது ஏறு குட்டி ,இறங்கு குட்டி பலி கொடுத்து பலி ஆடு காதை அறுத்து காதில் வரம் குருதியை சாமுண்டீஸ்வரி அம்மன் நெற்றியில் திலகமாக (பொட்டு) வைக்கிறார்கள் . இது இக்கோயிலின் சிறப்பு ஆகும்..*

**வழிபாடு**

*தினந்தோறும் பூஜை மீடைபெறுகிறது. திருவிழாவின் போது கூழ் ஊற்றுதல் , ஆடு, கோழி பலி கொடுத்தல் தினந்தோறும் பூஜை செய்தல். வேண்டுதல் இப்பவர் வாரத்திற்கு ஒரு நாள் பூஜை செய்கிறார்கள். கார்த்திகை, தை மாதங்களில் சிறப்பு பூஜை நடைபெறுகிறது. வெள்ளி, செவ்வாய் ஆகிய இரு நாட்கள் பூஜை நடைபெறுகிறது. பூ,பழம், தேங்காய்,வெற்றிலை பாக்கு,நெய், பால், பன்னீர் ,மஞ்சள், குங்குமம் அம்மனுக்கு படைக்கப்படும் பொருட்கள் ஆகும்.*

**காளியம்மன்**

*காளியம்மன் கோயில் தோன்றிய வரலாறு*

*வேலூர் மாவட்டம் ஆம்பூர் மீஷீ பேர்ணம்பட்டு செல்லும் தேசிய நெடுங்சாலை வழியில் கொத்தூர் உள்ளது. இந்த கிராமத்தில் காளியம்மன் கோயில் அமைந்துள்ளது. இந்த கோயில் சிறப்பு வாய்ந்த்த. ஊரில் இருந்து இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் ஊருக்க வெளியில் இக்கோயில் உள்ளது. 45 ஆண்டு சிறப்பு வாய்ந்த்து. கம்மவர் வகுப்பை சார்ந்தவர்*

*ஒரு ஏழையாக பண்ட மாற்று முறையில் தன்னுடைய தொழிலை மேற்கொண்டவர் சாமியாடுபவர் திரு. ராகவலு சுவாமி அவர்கள். ஒரு நாள் சாமியாடி அவர்கள் கனவில் காளியம்மன் தோன்றி எனக்கு கோயில் கட்டி வழிபடு என்று கூறியதாம். அன்று முதல் அவர் தன்னுடைய நிலத்தில் பலா மரத்தடியில் காளியம்மனுக்கு பூஜை செய்து வந்தார். பின்நாளில் கோயில் கட்டப்பட்டது. சாமியாடி மறைவுக்கு பின் கொத்தூர் காளியம்மன் கோயிலை அவர் மகன் திரு . வெங்கடதிரி அவர்கள் நடத்தி வருகிறார்.*

**நம்பிக்கை**

*கோயில் கட்டிய அன்று முதல் காளியம்மன் அம்மனுக்கு பூஜை செய்தல் , கோயிலுக்கு வரும்பக்தர்களுக்கு அருள்வாக்கு சொல்லுதல், பில்லி, சூன்யம், ஏவல், பேய்ஓட்டுதல், நோய்களை குணமாக்குதல், குழந்தையின்மை போன்றவற்றை கொத்தூர் காளியம்மன் நிறைவேற்றுவதாக மக்கள் நம்புகின்றன..*

**வழிபாடு**

*செவ்வாய்கிழமை, வெள்ளிகிழமை, ஞாயிறுகிழமை ஆகிய கிழமைகளில் பூஜைகள் நடைப் பெறு. கின்றன.அமாவாசை அன்று சிறப்பு பூஜை நடைப்பெறும். இந்நாளில் ஆடு .கோழி பலி கொடுப்பார்கள வருடத்திற்கு ஒரு முறை மாசி மாதம் வரும் அமாவாசை அன்று திருவிழா நடைபெறுகிறது. அன்று ஆடு கோழி பலி கொடுப்பார்கள் திரு. ராகவலு சுவாமி அவர்கள் மறைவுக்கு பின் அவர் மகன் ஆர்*

*வெங்கடதிரி தற்போது இக்கோயிலை பராமரித்து வருகிறார்.நான் ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட பகுதியில் உள்ளது காளியம்மன் கோயில் ஆகும் காளியம்மன் என்றாலே நினைவுக்கு வருவதே "சிலப்பதிகாரத்தில் கொற்றவை வழிபாடு" பெரும்பாலும் காளியம்மன் என்றாலே சுடுகாட்டில் வாழ்பவள், காட்டில் (வனம்) வாழ்பவள். "வடமதுரகாளி அம்மனுக்கு வனத்தில் கோயில்"–4 கட்டி இன்றளவும் பூஜை நடைப்பெற்று வருகிறது ஐம்பெரும் காப்பியங்களில் சிலப்பதிகார காப்பிய காலங்களில் காமக் கோட்டங்கள் இருந்தன–5 என்பதை நாம் அறிந்த ஒன்று. "எல்லா தெய்வங்களும் இந்த மண்ணில் பிறந்து இறந்த்தாக கூறப்படுகிறது–"5*

**முடிவுரை**

*சங்க கால முதல் சம காலம் வரை மனிதன் தோன்றிய காலம் முதல் தெய்வம் என்பது தன்னை மீறிய ஒரு சக்தி உண்டு என்பதை உணந்தான் அது இறைவன் ஒருவன் தான் என்று உலகத்திற்கு எடுத்து கூறவும் இறைவனை வழிபடவும் சடங்கு முறைகளை பண்டைய உலகம் நாட்டார் தெய்வங்கள் பற்றி அறிய பயன்படுகிறது.*

**மேற்கோள் நூல்கள்**


1. திருக்கோயில்களில் சமூக உறவுகளும். முனைவர் இராஜசேகரன் – பக்கம் 19
2. தமிழ் பண்பாட்டில் திரௌபதி அம்மன் வழிபாடு– முனைவர் .ஏழுமவை– பக்கம் 39
3. குறைதீர்க்கும் நம்மஊரு சாமி– ஆர். பொன்னாம்மாள்– பக்கம் 16
4. தமிழகத்தின் புகழ்பெற்ற அம்மன் ஆலயங்கள்–எம்.எஸ்.சுப்புலட்சுமி சிவமதி பக்கம்15
5. சாமிகளின் பிறப்பும் இறப்பும் –ச.தமிழ்ச்செல்வன்– பக்கம்–10


**துணை நூல் பட்டியல்**


1. திருக்கோயில்களில் சமூக உறவுகளும். முனைவர். இராஜசேகரன், உலக தமிழாராய்ச்சி நிறுவனம்
2. தமிழ் பண்பாட்டில் திரௌபதிஅம்மன் வழிபாடு– முனைவர் .ஏழுமவை, முனைவர் சீனிவாசன், இரா.சீனிவாசன் ,மு.ஏழுமலை, முதற்திப்பு–டிசம்பர் 2022, பரிசல் வெளியீடு
3. குறைதீர்க்கும் நம்மஊரு சாமி– ஆர் . பொன்னாம்மாள், முதற்பதிப்பு–செப்டம்பர்2010, நான்காம் பதிப்பு–ஜீலை 2018, டிரேடிங் ஏஜென்ஸி பிரைவேட் லிமிடெட்
4. சாமிகளின் பிறப்பும் இறப்பும்– ச.தமிழ்ச்செல்வன், முதல் பதிப்பு 2011, பத்தாம் அச்சு 2023, பாரதி புத்தகாலயம்
5. தமிழகத்தின் புகழ்பெற்ற அம்மன் ஆலயங்கள், எம்.எஸ்.சுப்புலட்சுமி சிவமதி, முதல் பதிப்பு–2017, தமிழ்ச்சோலை பதிப்பகம்
6. சாமிகளின் பிறப்பும் இறப்பும்–ச.தமிழ்ச்செல்வன், முதல் பதிப்பு 2011, பத்தாம் அச்சு 2023, பாரதி புத்தகாலயம்தகவல் கொடத்தவர்கள்


**தகவல்கள் கொடுத்தவர்கள்**

1. கொத்தூர் வெங்கடதிரி – வயது 44 பத்தாம் வகுப்பு–9944021218
2. பாலூர் தயாநிதி– வயது 40 ஐந்தாம் வகுப்பு–9940925205
3. பாலூர் கனகா வயது 75 படிக்கவில்லை.
4. பாலூர் ஈஸ்வரி வயது 55 ஃ ஐந்தாம் வகுப்பு–